# தொற்றுப் பரவும் காலப்பகுதியில் பருவப் பெயர்ச்சி மழை பாதுகாப்புக் குறிப்புகள்

ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்சிடமிருந்து

v 1.0 - 21/05/2020



# இலங்கையில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது எந்தளவு பொதுவானது?

இலங்கையில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது என்பது அடிக்கடி ஏற்படும் இயற்கை அனர்த்தமாக அமைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக வருடாந்தம் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பெருமளவு சேதங்களை ஏற்படுத்தியிருந்தது.

COVID-19 தொற்று பரவி வரும் சூழலில், ஆண்டின் மே மாதத்தில் இருக்கும் நிலையில், முன்னரை விட தற்போது அதிகளவு முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

# வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது தொற்றிலிருந்து எவ்வாறு என்னை பாதுகாத்துக்கு கொள்வது?

அனர்த்தத்தின் போது வினைத்திறன் வாய்ந்த செயற்பாடுகளில் நெருக்கமான தொடர்புகள் பேணப்பட வேண்டியிருக்கும் - இது சமூக தூரப்படுத்தலுக்கு மாறானது. எவ்வாறாயினும், COVID-19 பரவலை கட்டுப்படுத்துவதற்கு, புதிய மூலோபாயங்களை பின்பற்ற வேண்டியுள்ளது. இதனூடாக எம்மையும், மீட்புப் பணியில் ஈடுபடுவோரையும் ஆபத்துக்குள்ளாக்க வேண்டாம்.



## பின்வரும் அவசர நிலைகளை பின்பற்றி வெள்ளம் மற்றும் COVID-19 இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**அவசர பொருட் தொகுதியை கொண்டிருக்கவும் -**
இதில் முகக் கவசம், கையுறைகள், சனிடைசர், நீர், உணவு, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உங்கள் அடையாள அட்டை இருப்பதை உறுதி செய்யவும்.

**பாதுகாப்பான பகுதிக்கு செல்லவும் -**
வெள்ள எச்சரிக்கைவிடுக்கப்படும் போது அல்லது அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகும் போது பாதுகாப்பான இடத்துக்கு நகரவும். கொரோனாவைரஸ் தொற்றுப் பரவலை தடுப்பதற்காக பொதுக்கூடாரங்களில் தங்கியிருப்பதற்கு மாறாக, குடும்பத்தார் அல்லது நண்பர்களுடன் இருப்பது பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**சமூக தூரப்படுத்தலை எப்போதும் பின்பற்றவும் -**
மீட்பு அல்லது சுகாதார பணியாளர்களுடன் நீங்கள் தொடர்பை பேண வேண்டுமாயின், முகக் கவசம் மற்றும் கையுறையை அணிந்த பின்னர் அவர்களின் பகுதிக்கு செல்லவும். நீங்கள் சுகயீனமுற்றால், அதிகார தரப்பினருக்கு உடனடியாக அறிவிக்கவும்.

**அனுசரித்துச் செல்லவும் -**
பொது தங்குமிடப் பகுதிக்கு நீங்கள் அனுப்பப்பட்டால், அவற்றை செயற்படுத்துபவர்களுடன் கலந்துரையாடி அங்கு காணப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்து, அவற்றுக்கு ஆதரவளிக்கவும்.

# பாதுகாப்பான பகுதிக்கு செல்லும் வரை எனது வீட்டை எவ்வாறு நான் பாதுகாப்பாக வைத்திருப்பது?

- மின்சார விநியோகத்தை இடை நிறுத்தவும்.
- மிதந்து செல்லக்கூடிய பொருட்களை கட்டி, பாரமான பொருளை வைத்து தக்க வைக்கவும்.
- கண்ணாடி பொருட்களை பொலிதீன் பைகளில் இட்டு வைக்கவும், இதனூடாக அவை உடைந்தால் துகள்கள் அனைத்து பகுதிகளுக்கும் பரவாது.
- தளபாடங்களை கட்டிலின் மேல் வைக்கவும், அதன் மீது பிரத்தியேக பொருட்களை பாதுகாப்பாக வைக்கவும்.
- அசைக்கமுடியாத சாதனங்களின் மின் ஆழியை கழற்றிவிடவும்.




# வெள்ள அனர்த்தத்தின் பின்னர் அவசர செயற்பாடுகள்

- உள்ளே செல்லுமுன்னர் எச்சரிக்கையாக இருக்கவும். வெள்ளத்தின் போது, உள் நிலப்பகுதியில் அடித்து வரப்பட்ட உடைந்த துணிக்கைகள், போத்தல் துண்டுகள் மற்றும் சேறுகள் போன்றன காணப்படலாம்.
- COVID-19 தொற்று மற்றும் இதர தொற்றுக்களிலிருந்து உங்கள் இல்லத்தை தொற்று நீக்கம் செய்து கொள்ள PHI அல்லது ஏனைய சுகாதார சேவை அமைப்புகளின் உதவியை பெறவும்.
- வெள்ள நீருக்கு வெளிப்படுத்தப்பட்ட சாதனங்களை தொட வேண்டாம்.
- ஈரமடைந்த சகல பொருட்களையும் நன்கு சுத்தம் செய்து கொள்ளவும். வெள்ள நீரினால் கழிவுகள், அபாயகரமான இரசாயனங்கள், ஆபத்தான துணிக்கைகள் அடித்து வரப்பட்டிருக்கலாம்.
- உங்கள் வீட்டு மின் சுற்றை பரிசோதிக்கவும். மின்ஆழிகளினுள் வெள்ள நீர் தேங்கியிருந்தால், மின்னூட்டம் ஏற்படலாம். பயன்படுத்தும் முன்னர் அவற்றை நன்கு உலர்த்திக் கொள்ளவும்.
- மோட்டார்கள் மற்றும் சுவிட்ச் கியர்கள் போன்றவற்றின் உள்ளெடுப்பு தாங்கும் ஆற்றலை பரிசோதித்துக் கொள்ளவும். குறைந்தளவில் இருக்குமாயின், மின்னிணைப்பாளர் உலர, வானிஷ் செய்ய அல்லது பேக் செய்ய வைக்கவும்.
- கொதித்தாறிய நீரை பருகவும்.
- சேதமடைந்த சகல பொருட்களையும் பட்டியலிட்ட பின்னர், காப்புறுதியாளருக்கு அறிவிக்கவும்.



# வெள்ளத்திலிருந்து எனது வியாபாரத்தை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?



**COVID-19 தொற்றுப் பரவும் சூழலில் உடனடியாக இயங்குவது என்பது கடினமானது. எவ்வாறாயினும், நீங்கள் வெள்ள அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதியில் இருந்தால், தற்போதிலிருந்து ஆயத்தமாகவும்.**

- இரசாயன பொருட்களை (கிருமிநாசினிகள், பீடைநாசினிகள், நச்சுப் பொருட்கள் நீருக்கு வெளிப்படுத்தப்பட்டால் எரிவை ஏற்படுத்தக்கூடியவை) நீர் உட்புகாத கொள்கலன்களில் இட்டு, வீட்டிலுள்ள மிகவும் உயரமான பகுதியில் வைக்கவும்.
- பெறுமதி வாய்ந்த சாதனங்கள் மற்றும் இயந்திரங்களை நீர்புகாத கொள்கலன்களில் இட்டு அவற்றை பாதுகாப்பான பகுதிகளில் வைக்கவும்.
- ஊரடங்கு அனுமதிகளை பெற்று, விற்பனை நிலையத்தை பாதுகாப்பாக ஒழுங்குபடுத்தக்கூடிய சிலரை அழைத்து அவர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்து முன்னாயத்தங்களை மேற்கொள்ளவும்.
- வானிலை மற்றும் வெள்ள நிலை மோசமடைந்தால், கையிருப்பிலுள்ள தொகையை மாற்றுப் பகுதிகளுக்கு கொண்டு செல்லக்கூடிய பகுதிகளை நிறுவிக் கொள்ளவும்.
- இறாக்கைகளை கொண்டிருந்தால், பொருட்கள் உயர்ந்த பகுதியில் வைக்கப்பட வேண்டும்.
- மணல்திட்டுகள் போன்ற நீர் உட்புகுவதை தடுக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

# நீண்ட கால முன்னேற்பாடுகள்

- மேல் மாடிகளுக்கு இலகுவாக கொண்டு செல்லக்கூடிய, இலகு எடை கொண்ட, பொருத்திக் கொள்ளக்கூடிய தளபாடங்களை வாங்கவும்.
- கழிகான் குழிகளுக்கு செல்லும் குழாய்களில் மீளத்திரும்பாத வால்வுகள் பொருத்திக் கொள்ள வேண்டும். கட்டிடங்களினுள் மற்றும் குழிகள் அல்லது சம்ப் பகுதிகள் நிறுவப்பட்டு, உள்ளே வரும் நீரை அகற்றிக் கொள்ளக்கூடிய உள்வைக்கக்கூடிய பம்பிகளை நிறுவிக் கொள்ளவும்.



# முக்கியம்:

- உங்கள் வாகனம் தரித்து நிற்கும் போது வெள்ள நீரில் மூழ்கியிருந்தால், அதை இயக்க முயற்சிக்க வேண்டாம், வாகன முகவர் அல்லது தகைமை வாய்ந்த வாகன பழுதுபார்ப்பு நிபுணர் ஒருவரை அழைக்கவும்.
- உங்கள் கார் வெள்ள நீரில் இடையில் நின்றுவிட்டால், கவனமாக இருக்கவும். வாகனத்தின் என்ஜின் பகுதியினுள் நீர் உள்ளெடுக்கப்படுவது என்பது ஆபத்தானது.
- நீங்கள் வெள்ளம் ஏற்பட்ட பகுதியை நோக்கி பயணிக்கின்றீர்களாயின், பாதுகாப்பான மாற்று வழியை பயன்படுத்தி உங்கள் பயணத்தை தொடரவும்.

